புதுச்சேரி அரசு
பள்ளிக்கல்வி இயக்ககம்
அனைவருக்கும் கல்வி இயக்கம்
கோடைவிடுமுறை கல்விச் சுற்றுலா

# பத்திரிக்கை செய்தி குறிப்பு

அனைவருக்கும் கல்வி இயக்கம், புதுச்சேரி மாணவர் வாழ்வியல் திறன் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறது. இவ்வாண்டு (2011) கோடை விடுமுறையில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அனைவருக்கும் கல்வி இயக்கம் (SSA) புதுச்சேரி மற்றும் இந்திய ரயில்வே சுற்றுலாக் கழகத்துடன் (IRCTC) இணைந்து அண்டை மாநிலங்களில் நிலவும் கலை மற்றும் பண்பாட்டினை நேரில் சென்று அறிந்து மகிழ்ந்துவர ஒரு கல்விச் சுற்றுலாவினை ஏற்பாடு செய்துள்ளது. இதில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் உள்ள ஏழாம் மற்றும் எட்டாம் வகுப்பு மாணவ/மாணவியர் கலந்து கொள்கின்றனர். இச்சுற்றுலா 18.05.2011 அன்று பிற்பகல் 3.30 மணி அளவில் புதுச்சேரி ரயில்நிலையத்தில் இருந்து இந்திய ரயில்வே சுற்றுலாக் கழகம் ஏற்பாடு செய்துள்ள 7 பெட்டிகள் அடங்கிய சிறப்புரயில் மூலம் புறப்படுகிறது. அவ்வமயம், புதுச்சேரி மாநில முதல்வர் மாண்புமிகு **N. ரங்கசாமி** அவர்கள் கொடி அசைத்து துவக்கி வைக்கிறார். இத்துவக்க விழாவில் கல்வித்துறைச் செயலர் **திரு. ராஜீவ் யாதவன்ஷி** அவர்கள், பள்ளிக்கல்வி இயக்குநர் **திரு. G. பன்னீர்செல்வம்** அவர்கள், அனைவருக்கும் கல்வி இயக்க மாநில திட்ட இயக்குநர் **திரு. R. பார்த்தசாரதி** ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். நான்கு நாட்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள (18.05.2011–21.05.2011) இச்சுற்றுலாவில் புதுவை பகுதியை சேர்ந்த 300 மாணவ/மாணவியரும், அவர்களுக்கு துணையாக 30 ஆசிரியர்களும் மற்றும் காரைக்கால் பகுதியை சேர்ந்த 150 மாணவ/மாணவியரும் 15 ஆசிரியர்களும் கலந்து கொள்கின்றனர். அவர்களுக்கு தேவையான உணவு, உறைவிடம் மற்றும் மைசூர், பெங்களூர் ஆகிய நகரங்களில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க இடங்களை சுற்றி பார்ப்பதற்கு சிறப்பு பேருந்து உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் புதுவை அரசு, அனைவருக்கும் கல்வி இயக்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இக்கோடை விடுமுறை கல்விச்சுற்றுலா சிறப்பு ரயில் 21.05.2011 அன்று காலை 10.30 மணி அளவில் மீண்டும் புதுவை ரயில்நிலையம் வந்தடைகிறது.

அனைவருக்கும் கல்வி இயக்கம், புதுச்சேரி